# பேசும் கண்ணாடி

கண்ணாடி : வாருங்கள் முருகா ......... எங்கே
இந்த நேரத்தில்
உங்கள் உடன்பிறவா
சகோதரியை பார்க்க வந்தீர்களா?
அவள் உறங்குகிறாளே! மணி 12.05

முருகா : இல்லை, இல்லை,
நான் உன்னைக் காணவே வந்தேன்

கண்ணாடி : என்ன! என்னைப் பார்க்கவா!



முருகா : ஆமாம்...... என் சகோதரியோ துயில் எழுந்தது முதல்
இரவு தலை சாய்க்கும் வரை உன்னை விட்டு
பிரிவதில்லை. அவள் கண் உறங்கும் போதுதான்
நீ அவள் கண்ணைவிட்டு இறங்குகிறாய்.
ஆகவேதான் உன்னை பேட்டி காண வந்தேன்

கண்ணாடி : சரி......... கேளுங்கள் முருகா.........

முருகா : விழிக்கும் பொழுதே......
விழியில் உன்னை ஏற்றுகிறாள்.........
நீ இறங்கும் பொழுதோ.........
அழகிய ஒற்றைவிரல் கொண்டு ஏற்றுகிறாள்
அவள் இமைகள் மூடாவுரை.........
உன்னை இடையில் இறக்குவதேயில்லை
நீ இல்லா முகமும்......
அவள் காட்டுவதேயில்லை......
நீ கொடுத்த சுகமும்......
அவள் சொன்னதில்லை......

கண்ணாடி : மனித உருவில் மாயக் கண்ணாடிகள்.........
சிந்தனைக்கு ஏற்றார்போல் சித்தரிக்கும்......
பார்க்கும் பொழுதே உடைத் தெரிய வைக்கும்
நானோ......
என் தலைவிக்குக் கட்டுப்பட்டவன்......
அவள் விழிகள் கேட்பதையே
நான் காட்டுவேன்
உண்மையை தெளிவாகக் காட்டுவேன்
நன்மையை நச்சென்று காட்டுவேன்
தீமையை பெரிதாக்கி காட்டுவேன்
அவள் சிந்தனைக்கும் செயலுக்கும்
நானே வழிகாட்டி

முருகா : சரி …… என் தலைவியை பற்றி கூறு

கண்ணாடி : இமயமாய் நல்ல எண்ணங்கள்
கடல் போல், பரந்த இதயம்…
அலைபோல் தர்ம குணம்
கொடி போல் புகழ் ஏணியில் ஏறினாலும்
தாய் தந்தை பக்தி மாறுவதில்லை
தான் பெற்ற மகுடங்களை
தாய் தந்தையர்க்கு சூட்டிப்பார்ப்பாள்
ஆம்………
தாய் தந்தை இல்லையேல் அவள் இல்லை
என் நண்பன் இல்லையேல்
என் தலைவிக்கு நானும் இல்லை

முருகா : புரியவில்லையே!!

கண்ணாடி : யாரோ ஒருவர்க்கு நான் உதவியாக
இருந்தும்
என்னை பாரம் என நினைக்காமல்
என்னை எந்நேரமும் தாங்கிநின்று
அவள் முகம் வடுவானாலும்
என் முகம் சிதையாமல்
காக்கும் என் உயிர் நண்பன்
"என்னை தாங்கும் மூக்கு"
உன் தலைவிக்கு பெற்ற தாய்
எனக்கோ!.......
என்னை தாங்கும் தாய்!

முருகா : உன் தலைவிக்கு கிட்ட பார்வையா?
தூரப் பார்வையா?

கண்ணாடி : என்னை சோதித்து பார்க்கிறாயா?

முருகா : இல்லை, இல்லை நீ பதில் கூறு…… பிறகு
நான் சொல்கிறேன்

கண்ணாடி : இரண்டு பார்வையும் என் தலைவிக்கு
உண்டு

முருகா : என்ன?!

COPYRIGHT ©COPYRIGHT FOTOSEARCH

கண்ணாடி : ஆம்! ஆறடி அருகில் ஓர் ஏழை அழுதாலும்
அவள் கண்கள் அழுகிறது
தொட்டு துடைக்க கை விரல் நீள்கிறது……
இது கிட்டப்பார்வை!

: ஆயிரம் மைல் தாண்டி நடந்த பூகம்பம்
பார்த்து, அவள் மனம் வெம்பி அழுகையில்
இது தூரப்பார்வை!
என்ன சரியா ? ……… நீ நினைத்ததைச்
சொன்னேனா?

முருகா : சரியாகச் சொன்னாய்…………
என் உடன் பிறவா சகோதரி
குணத்தில் குணவதி!
தர்மத்தில் தனவதி!
குடும்பத்தில் குத்துவிளக்கு

கண்ணாடி : சரி, சரி நீண்ட நேரம் ஆகிவிட்டது. நாளை காலை
உன் சகோதரி சீக்கிரம் எழுந்து
விடுவாள். நானும் சிறிது உறங்க வேண்டும்.

முருகா : சரி, கடைசியாக ஒரு கேள்வி

கண்ணாடி : கேளுங்கள்

முருகா : நாளை உன் தலைவி, என் உடன்
பிறவா சகோதரி 22 வது பிறந்த நாள்.
உன் தலைவி எப்படி கொண்டாடப்
போகிறாள்?

கண்ணாடி : நாளை என்ன, என் தலைவிக்கு
தினம் தினம் புதிதாய் பிறக்கும் நாட்கள்
போல், என் தலைவியும் தினம் தினம்
புதியவள் போல் தான் இருப்பான்
துயில் எழுவாள்
தாய் தந்தை தொழுவாள்
சிரிப்பில் மலர்வாள்
சிந்தனை ஏற்றுவாள்
குடும்பத்தில் குதூகலம்
இதயத்தில் புத்துணர்ச்சி
தினம் ஒரு புது மலர்
என் தலைவி……
அனைவரையும் ரசிக்க வைக்கும்
ஒரு ரோஜா மலர்

முருகா : சரி நண்பா நான் வருகிறேன்
என் உடன்பிறப்பைப் பார்த்துக் கொள்ள
உன்னால் அவளுக்குப் பெருமை
அவளால் இசைக்குப் பெருமை...... நீ
காலையில் எழும் என் உடன்பிறவா
சகோதரிக்கு
கூறி விடு ......... என்
பிறந்த நாள் வாழ்த்துக்கள்!
வாழ்க பல்லாண்டு,
பல்லாயிரத்தோராண்டு




என்றும்

யில் தாங்கும்